## TAMIL NADU OPEN UNIVERSITY
**ESTATE SECTION**
**CHENNAI -15**

Sealed Tenders are invited auctioning 2 condemned vehicles of Tamil Nadu Open University on "**as is where is**" condition.

https://www.tnou.ac.in/

Telephone: **044 24306645**

**REGISTRAR**

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
**வளாகப் பிரிவு**
**சென்னை - 15**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கழிவு செய்யப்பட்ட பல்வேறு வகையான 2 ஊர்திகள் "**உள்ளது உள்ளபடியே**" ஏலம் செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள்:

https://www.tnou.ac.in/

தொலைபேசி: **044 24306645**

**பதிவாளர்**

# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15

ஒப்பந்த அறிக்கை எண்.01/Condemnation/2023 நாள்:02.03.2023

கழிவு செய்யப்பட்ட தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக இயக்கூர்திகள் "**உள்ளது உள்ளபடியே**" விற்பனை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த படிவத்தினை (http://www.tnou.ac.in/) என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து அத்துடன் ரூ. 573/- க்கான (ரூ. 500 + வரிகள் உட்பட) தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் கேட்புக்காசோலையை Tamil Nadu Open University, Chennai – 15 என்ற பெயரில் இணைக்க வேண்டும்.

ஒப்பந்த அறிக்கை எண் மற்றும் சம்பந்தப்பட்ட இயக்கூர்தி வகையையும் மற்றும் வாகன எண்ணையும் முத்திரையிடப்பட்ட உறையின் மீது குறிப்பிட வேண்டும். (இவற்றின் விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி வடிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன). இவ்வாறு குறிப்பிடாத படிவங்கள் ஏலத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் **21.03.2023** அன்று மதியம் **2.00** மணிக்கு முன்னதாக வரவேற்கப்படுகின்றன. அதற்கு பிறகு வரும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கழிவு செய்யப்பட்ட ஊர்திகள் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த படிவங்கள் **23.03.2023** பிற்பகல் **3.00** மணிக்கு ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் பதிவாளர், 4-ஆம் தளம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னையில் திறக்கப்படும்.

**பதிவாளர்**

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம், சென்னை - 600 015

### இயக்கூர்திகள் ஏலம் விடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி குறித்த விதிமுறைகள்:

1. ஏலத்திற்குரிய இயக்கூர்திகள் விபரம் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. பிற்சேர்க்கையில் கூறப்பட்டுள்ள இயக்கூர்திக்கு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் **தனி உறையில்** வைத்து அனுப்பப்படவேண்டும்.

2. இந்த விதிமுறைகளின் பிற்சேர்க்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ள பிணையத் தொகைக்கு தனியாக, Tamil Nadu Open University, Chennai – 15 அளிக்கும்படியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கி கேட்புக் காசோலை பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். உரிய கேட்புக் காசோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். கேட்புக் காசோலைக்குப் பதில் காசோலை முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்களை வரவேற்று, இவ்வலுவலகத்திலிருந்து இணையதளத்தில் விளம்பரம் வெளியிடப்பட்ட நாளுக்குப் பிறகு வாங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்களை நிறைவு செய்து தனி உறையில் இட்டு இயக்கூர்தி எண்ணையும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர எண்ணையும் உறையின் மேல் எழுதி முத்திரையிட்ட உறைகளை 21.03.2023 அன்று மதியம் 2.00 மணிக்கு முன்னதாக இவ்வலுவலகத்தில் கிடைக்குமாறு ”பதிவாளர், தமிழ்நாடுதிறந்தநிலைப் பல்கலைக் கழகம், சென்னை - 600 015” என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். அதற்குப் பின் காலதாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

4. ஏல ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் ஊர்தியினை பார்வையிடலாம்.

5. ஊர்திக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒவ்வொரு ஏலதாரரும் ஊர்தியை நேரில் பார்த்து மற்றும் ஆவணங்கள், பதிவுச்சான்று போன்றவற்றை சரிபார்த்த பின்னர், ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள். ஊர்தியை பார்வையிடாமலும், ஆவணங்களை சரிபார்க்காமலும் அட்டவணையில் உள்ள விவரங்களை மட்டும் கொண்டு விலைப்புள்ளி கொடுத்து ஏற்படும் தவறுகளுக்கு இத்துறை எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் ஏலதாரர் ஊர்தியை பார்வையிட்டு, **”உள்ளது உள்ளபடியே”** நிலையில் மன நிறைவு கொண்டால் மட்டுமே விலைப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.

6. பிணைமுறித் தொகைக்கான வங்கி வரைவோலையின் பின்புறத்தில் ஏலதாரரின் பெயர், கைபேசிஎண், ஏல அட்டவணை வரிசைஎண் மற்றும் வாகன எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட வேண்டும். (ஏலதாரர் கையொப்பமிடக் கூடாது).
7. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்தில் குறிக்கப்பட வேண்டிய விவரங்களைத் தவிரமற்ற முறையீடுகள், மறுப்புகள் போன்றவை குறிப்பிட்டிருந்தால் அந்த ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் ஏற்றுக்

கொள்ளப்படமாட்டாது. மேலும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்களை தவிர மற்ற கடிதங்கள் ஒப்பந்தப்புள்ளியில் உள்ள விவரங்களை மாற்றவோ, தீராய்வு செய்யவோஅனுப்பப்பட்டால் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் மட்டுமே கையொப்பமிட்டு இருக்க வேண்டும். வேறொருவர் கையொப்பம் இட்டு இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

9. கழிவு செய்யப்பட்டு ஊர்திக்கு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொண்ட உறைகள் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் ஊர்திகள் கழித்து கட்டும் குழுவினரால் பல்கலைக் கழக பதிவாளர், 3-ஆம் தளத்தில் 21.03.2023 அன்று மதியம் 3.00 மணிக்கு திறக்கப்படும் அவ்வாறாக முத்திரையிட்ட உறைகள் திறக்கப்படும் பொழுது ஒப்பந்ததாரர்கள் வந்திருக்க வேண்டும். அதிகமாக விலை குறித்துள்ள விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டவுடன் அவரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிக்கப்பட்டுள்ள தொகையில் 25%தொகையை 23.03.2023 அன்று மாலை 3.00 மணிக்குள் வங்கி கேட்புக் காசோலை மூலமாக செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் அவரால் ஒப்பந்தப்புள்ளியுடன் அனுப்பப்பட்ட பிணைத் தொகை தண்ட இழப்பாக கருதப்பட்டு பல்கலைக்கழக கணக்கில் சேர்க்கப்படும். வங்கி கேட்புக் காசோலைகள் 02.03.2023 தேதியன்று அல்லது அதற்குப்பின் எடுக்கப்பட்டவைகளாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஊர்திக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளியைத் தவிர மற்ற ஒப்பந்ததாரர்கள் தங்களுடைய EMD-க்கான DD-ஐ உடனே திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

10. விற்பனை உறுதியாக்கம் செய்யப்பட்ட உத்தரவு பெறப்பட்ட நாளிலிருந்து பத்து (10) நாட்களுக்குள்ளாக அவ்வாணையில் தெரிவிக்கப்படும் தொகையை வங்கிக் கேட்புக் காசோலையாக "Tamil Nadu Open University, Chennai – 15" என்று பெறப்பட்டு செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், அவரால் ஒப்பந்தப்புள்ளியின் 25% தொகையாக செலுத்தப்பட்ட தொகை தண்ட இழப்பாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பல்கலைக்கழக கணக்கில் செலுத்தப்படும்.

11. மேற்கூறிய 10 தினங்களுக்கு மேல் நீட்டிப்பு கேட்கும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

12. விற்பனை உறுதியாக்கம் செய்யப்படாவிட்டால், ஒப்பந்தப்புள்ளயின் 25% மதிப்பிற்கான செலுத்தப்பட்ட வங்கி கேட்புக் காசோலை (EMD) அன்றே திருப்பி தரப்படும் / அனுப்பி வைக்கப்படும்.

13. வங்கி கேட்புக் காசோலை இவ்வலுவலகத்தாரால் மாற்றப்பட்டபின் விடுவிப்பு உத்தரவு ஊர்திகள் கழித்துக் கட்டும் குழுத்தலைவரால் வழங்கப்படும். அந்த உத்தரவு பெறப்பட்டபின் ஏலம் விடப்பட்ட ஊர்தியை இவ்வலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

14. முழுத் தொகையும் செலுத்தி விடுவிப்பு உத்தரவு பெற்றுக் கொண்டவர்கள் ஏலம் விடப்பட்ட ஊர்தியினை குறைந்தது 10 தினங்களுக்குள் எடுத்துக் கொள்ளாவிட்டால் ஆண்டு வாடகையாக அவரது ஒப்பந்தப்புள்ளி தொகையில் 20% கணக்கிட்டு வெற்றி பெற்ற ஒப்பந்ததாரரிடம் வசூலிக்கப்படும்.

15. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்தில் குறிக்கப்படும் தொகை, நிகர விலையாக எடுத்துக் கொள்ளப்படும், விற்பனைவரி மற்றும் விற்பனை வரித்தொகை மீதான மேல்வரி அவ்வமயம் அமலில் இருக்கும் விகிதத்தின்படி வசூலிக்கப்படும். அவ்வாறான தொகை விற்பனை உறுதியாக்க ஆணையில் தெரிவிக்கப்படும்.

16. எக்காரணமும் காட்டாமல் விற்பனை உறுதியாக்கம் செய்ய அல்லது தள்ளுபடி செய்ய ஊர்தியை கழித்துக்கட்டும் குழுவிற்கு உரிமையுண்டு.

17. ஊர்தி விடுவிப்பு ஆணை ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயருக்கு வழங்கப்படும், அன்னாரின் அங்கீகாரம் பெற்றவரின் பெயருக்கு விடுவிப்பு ஆணை வழங்க வேண்டுமெனில் அங்கீகாரம் பெற்றவரின் அடையாளத்தை காட்டும் வகையில் கீழ்க்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றில் ஓர் அரசு பதிவு பெற்ற அதிகாரியின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே அங்கீகாரம் அளித்தவரின் பெயரில் வாகன விடுவிப்பு அளிக்கப்படும். அடையாளத்தை காட்டுகின்ற ஆவணங்கள் கீழ்வருவன:
    1. பாஸ்போர்ட்
    2. ஓட்டுநர் உரிமம்
    3. வாக்காளர் அடையாள அட்டை
    4. குடிமைப் பொருள் வழங்கல் அட்டை
    5. அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடியஆவணங்கள்

18. ஊர்தியை பார்வையிடாமல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்து அதனால் ஏற்படும் பின் விளைவிற்கு இந்த துறை எந்த பொறுப்பும் எற்காது. ஊர்தி "**உள்ளது உள்ளபடியான**" நிலையிலேயே ஏலத்திற்கு விடப்படுகின்றன.

19. மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் உறுதியாக்கம் செய்து விடுவிப்பு உத்தரவுகள் வழங்கப்பட்ட பின் விற்பனை செய்யப்பட்ட ஊர்தி மற்றும் அதன் தொடர்பான ஏதேனும் குறைகள் இருந்தால் அது தொடர்பான வழக்குப்பதிவு செய்வதாக இருப்பின் அவ்வழக்கானது சென்னையில் உள்ள நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் டெண்டர்தாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : கழிவுசெய்யப்பட்டஏலத்துக்குரிய
ஊர்திகளின் விபரம்

**பதிவாளர்**

## ANNEXURE

**Details of Vehicle for which sealed tender is called for**

| Sl.No. | Vehicle | Make | Year of Purchase | Regn. No. | EMD Amount Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | Car | Maruti Esteem | 2003 | TN 07 AA 2828 | 2,000/- |